**செய்தி வெளியீடு எண்:24** **நாள்:13.01.2021**

பழந்தமிழரின் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தும் பணியை தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், 2019–2020 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக ரூ. 2 கோடி தொடரும் செலவினமாக தமிழ்நாடு அரசால் ஒப்பளிக்கப்பட்டு, அதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி மற்றும் அதன் சுற்றியுள்ள மணலூர், அகரம், கொந்தகை, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல் ஆகிய நான்கு இடங்களில் முறையான தொல்லியல் அகழாய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, ஆவணப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வு மற்றும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தினை கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தொல்லியல் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 2020–2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் மூலம் ஏழு தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் இரண்டு கள ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (Central Advisory Board for Archaeology - CABA) நிலைக் குழுவின் ஒப்புதலுக்காக தமிழ்நாடு அரசு பரிந்துரையின் பெயரில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் உரிய முன்மொழிகள் அனுப்பப்பட்டன.

**தொல்லியல் அகழாய்வுகள்**

1. கீழடி மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகள் – சிவகங்கை மாவட்டம்
2. ஆதிச்சநல்லூர் அதன் சுற்றியுள்ள பகுதிகள் – தூத்துக்குடி மாவட்டம்
3. சிவகளை அதன் சுற்றியுள்ள பகுதிகள் – தூத்துக்குடி மாவட்டம்
4. கொற்கை அதன் சுற்றியுள்ள பகுதிகள் – தூத்துக்குடி மாவட்டம்
5. கொடுமணல் – ஈரோடு மாவட்டம்
6. மயிலாடும்பாறை – கிருஷ்ணகிரி மாவட்டம்
7. கங்கைகொண்டசோழபுரம், மாளிகைமேடு – அரியலூர் மாவட்டம்

**தொல்லியல் கள ஆய்வுகள்**

1. புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வு
2. தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தினை கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தொல்லியல் கள ஆய்வு

தற்போது, தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையால் 2020–2021 ஆம் ஆண்டில் கோரப்பட்டுள்ள அனைத்து அகழாய்வுகள் மற்றும் கள ஆய்வுகளுக்கும் மத்திய தொல்லியல் துறையின் மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (Central Advisory Board for Archaeology - CABA) நிலைக் குழுவின் ஒப்புதல் 05.01.2021 அன்று பெறப்பட்டுள்ளது.

இதே போன்று, பல்கலைக்கழகங்கள், தொல்லியலில் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள் / முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான செயற்குறிப்புகளை மாநில அரசின் பரிந்துரையுடன், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக் கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்படுகிறது.

இதன் அடிப்படையில், 2020–2021 ஆம் ஆண்டிற்கான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் / துறைகள் / முகமைகளிடமிருந்து திட்டக் கருத்துருகள் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசு பரிந்துரையின் பெயரில் மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதில், சென்னையிலுள்ள சர்மா மரபுசார் கல்வி மையத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டம் – சென்றாயன்பாளையம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தால் சிவகங்கை மாவட்டம் – இலந்தக்கரை, தமிழ் பல்கலைக்கழகத்தால் கோயம்புத்தூர் மாவட்டம் – மூலப்பாளையம், சென்னை பல்கலைக்கழகத்தால் வேலூர் மாவட்டம் – வசலை மற்றும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் புதுக்கோட்டை மாவட்டம் – பொற்பனைக் கோட்டை ஆகிய இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ள முன்மொழிகள் அனைத்தும் மத்திய தொல்லியல் துறையின் மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் பரிசீலனையில் உள்ளன.

மேற்படி கருத்துருக்களுக்கு ஒப்புதல் பெறப்படுமாயின்; 2020–2021 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் முதன்முறையாக சுமார் 10–ற்கும் மேற்பட்ட வரலாற்று மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தொல்லியல் நெறிமுறைகளின்படி அகழாய்வுகள் மற்றும் விரிவான தொல்லியல் சார் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

2020–2021 ஆம் ஆண்டில் தற்போது மேற்கொள்ளப்படவுள்ள தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் மூலம் பண்டையத் தமிழகப் பண்பாட்டுப் பெருமையினை மீட்டெடுக்கும் நீண்ட அறிவியல் சார்ந்தமைந்த செயல்பாட்டின் முக்கிய படிக்கல் ஆகும்.

தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. எனவே, கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும் அக்கறை கொள்ளவும் நமது பன்முகம் கொண்ட வளமையான பண்பாட்டினை உலகிற்கு அறியச் செய்யவும் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன என்றும் அதன் மூலம் நமது மேன்மைக்கும் அறிவுக்கும் வளம் சேர்த்து இறுதியாக தமிழ்நாட்டின் வரலாற்றை உலக அரங்கில் நிலைநிறுத்திட தற்போது ஒப்புதல் பெறப்பட்டுள்ள தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் கள ஆய்வுகள் பேருதவியாக அமைந்துள்ளன.

தற்போது நடைபெற்று வரும் தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வு பணிகளில் உலகத் தரம் வாய்ந்த நடைமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதை தமிழகத் தொல்லியல் துறை உணர்ந்துள்ளது. நன்கு வடிவமைக்கப்பட்ட பன்முக அணுகுமுறைகளின் வழியாக தமிழ்நாட்டில் மரபு சார் மேலாண்மையினை மேம்படுத்தும் வகையில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**